<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 177) தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்.0281/2020/அ3, நாள்.05.10.2020-ஆம் தேதிய கடிதத்தில் இளநிலை உதவியாளர்கள் மற்றும் வருவாய் உதவியாளர்களுக்கான விரிவாக்கப் பயிற்சி (Comprehensive Training Course) Batch-1 நடைபெற உள்ளதால் இந்நகராட்சியில் பணிபுரியும் வருவாய் உதவியாளர்கள் திரு.கோ.கணேசன் மற்றும் திரு.து.ரமேஷ் ஆகிய இருவரை மேற்படி பயிற்சியில் 12.10.2020 முதல் 06.11.2020 வரை 20 - நாட்கள் பயிற்சியில் கலந்து கொள்ள அதற்கான உணவு மற்றும் வசதிகளுக்கான கட்டணம் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 20 - நாட்களுக்கு இரண்டு நபர்களுக்கு ரூ.2000x20=40,000/- தமிழ்நாடு நகரியல் பயிற்சி கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.0214/2014/சி1) | அனுமதிக்கப்பட்டது |

திருப்பத்தூர் நகராட்சி

அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 178) அரசாணை (நிலை) எண்.122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நிதி3) துறை நாள்.27.06.2008-ன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.29, பெரியார் நகர், மயானத்தில் உள்ள எரிவாயு தகன மேடையை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கைலாயநாதர் அறக்கட்டளை, சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தை சார்ந்த பணியாளர்கள் உரிய நேரத்தில் பணிகள் செய்யாமல் இருந்து வருகின்றனர். தற்போது கொரோனா வைரஸ் (கோவிட்-19) நோய் தடுப்பு பணியில் தீவிரமாக செயல்பட்டு வரும் நிலையில், மேற்படி நிறுவனத்தின் பணியாளர்கள் கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு இறப்பவர் உடலை தகனம் செய்ய தாமதபடுத்துகின்றனர். இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதோடு, பொதுமக்களும் பாதிப்பு அடைகின்றனர். எனவே, கைலாயநாதர் அறக்கட்டளை அமைப்பு முறையாக பணிகளை செயல்படுத்தாமல் உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும், நோய் தொற்று ஏற்படாத வண்ணம் தடுக்கும் பொருட்டும், மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவினை ரத்து செய்யவும், கடந்த ஐந்து மாதங்களாக கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு இறப்பவர் சடலங்களை தகனம் செய்யும் பணிகளை சன் அறக்கட்டளை, புதுப்பேட்டை மெயின் ரோடு, திருப்பத்தூர் நிறுவனத்தின் பணியாளர்கள் நல்ல முறையில் மேற்கொண்டு வருகின்றனர். எனவே, மேற்படி நிறுவனத்திற்கு எரிவாயு தகன மேடையை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு -: | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1. கைலாதநாதர் அறக்கட்டளை, சென்னை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை ரத்து செய்யலாம்.<br>2 சன் அறக்கட்டளை, புதுப்பேட்டை மெயின் ரோடு, திருப்பத்தூர் நிறுவனத்திற்கு எரிவாயு தகன மேடையை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.2142/2012/எச்1) | |

திருப்பத்தூர் நகராட்சி

அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 179) திருப்பத்தூர் நகராட்சியில் இரண்டு தட்டச்சர்கள் Outsourcing முறையில் 13.01.2020 முதல் 12.04.2020 தேதி முடிய மூன்று மாத காலத்திற்கு மட்டும் அருணை கம்ப்யூட்டர் பார்ம்ஸ் நிறுவனம், வாணியம்பாடி அவர்களின் ஒப்பந்தத்தின் மூலமாக பணிபுரிந்து வருகின்றனர். மேலும், தற்பொழுது 13.10.2020 முதல் 12.01.2021 வரை மூன்று மாத காலத்திற்கு மீண்டும் நீட்டிப்பு செய்யவும் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர், வேலூர் அவர்களின் விலை விகிதத்தின்படி ஊதியம் வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1397/2018/சி1) | அனுமதிக்கப்பட்டது |

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>Serial Number and Subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>90.10.2020</td><td>180) சட்டமன்ற உறுப்பினர் நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ் பணி செய்ய திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.அ4/041/2020 நாள் 08.10.2020–ம் தேதிய செயல்முறை உத்திரவு கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற உத்திரவு கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ. எ</th><th>வேலையின் நேரம்</th><th>மதிப்பீடு தொகை ரூ. இலட்சம்</th></tr><tr><td>1.</td><td>Construction of Storm Water Drain with Culvert to Buddappanar street and Venugopal Sami Koil Street ward no 22 at TPT</td><td>2.50</td></tr></table><br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண் 960/2020/இ1</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>Serial Number and Subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>90.10.2020</td><td>181) திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளை (Plastic and other waste) Baling செய்ய நவீன இயந்திரம் வாங்க உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டது.<br><br><table><tr><td>1.SB & Co-SWM Materials, Manpowers Suppliers & Contractor,<br>No-1 ESI Nagar, Thiruvachery, Agaram Main Road, Selaiyur, Chennai – 73.</td><td>Rs.10,24,600/-</td></tr><tr><td>2. Rajeswari L. Nathan Chemicals & Traders, No.115/90B, 2nd Floor, Perambur High Road, Perambur, Chennai-11</td><td>Rs.9,81,760/–</td></tr><tr><td>3. Jaya Suriya Tanding corporation, No.1, Dharkas Road, Attivakkam, Redhills, Chennai -60</td><td>Rs. 10,76,000/–</td></tr></table><br>மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9,90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம்<br>அனுமதிக்கலாம்.<br>2. பணிக்கான செலவீனத்தை நகராட்சி பொது நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ்<br>மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ந.க.எண். 871 /2020/இ1 | |

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 182) இந்நகராட்சியில் ஆணையர் உபயோகத்தில் உள்ள ஈப்பு வண்டி எண் TNBP3026 பழுது நீக்கம் செய்யப்பட்டதில் ஜெயின் கார்ஸ், வேலூர் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.116985/–யை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்831/2020/இ1 | அனுமதிக்கப்பட்டது |

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>Serial Number and Subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>90.10.2020</td><td>183) இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் ஜெட்ராடிங் வண்டி எண் TN 83P 6545 பழுது நீக்கம் செய்யப்பட்டது. எனவே கீழ்கண்டுள்ள பட்டியல் விவரப்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><table>
<tr><th>வ.எ</th><th>பழுது நீக்க விவரம்</th><th>பழுது நீக்கம் செய்யப்பட்ட நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை<br>ரூ.</th></tr>
<tr><td>1</td><td>வண்டியின் வெளிப்புறம் பழுது நீக்கப்பணிகள்</td><td>Whale Enterprise Private Limited, No-1/1D., Vilankurichi Road, Near Senthottam, Kalapatti, Koimbatore- 641 048</td><td>167000/–</td></tr>
<tr><td>2</td><td>வண்டியின் உட்புறம் பழுது நீக்கப்பணிகள்</td><td>Ashok Leyland- Sri Lakshmi 41/7A National Highway Opp. Vaniyambadi – 635 807</td><td>14291/–</td></tr>
</table><br><u>அலுவலக குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 710/2020/இ1</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>Serial Number and Subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>90.10.2020</td><td>184) இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளை (Plastic and other Waste) Baling செய்ய நவீன இயந்திரம் வாங்குதல் பணிக்கு 23.09.2020 –ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம்
<table>
<tr><th>பணியின் விவரம்</th><th colspan="2">ஒப்புநோக்கு பட்டியல்</th></tr>
<tr><td rowspan="3">Supply and Delivery and fixing of Fully Automatic Hydraulic Baling Machine at TPT<br><br><u>Estimate Amount – RS.9,90,000/–</u></td><td>1) Rajeswari L. Nathan Chemicals & Traders, No.115/90B, 2nd Floor, Perambur High Road, Perambur, Chennai-11</td><td>மதிப்பீட்டு விலை விகிதம்</td></tr>
<tr><td>2) Jaya Suriya Tanding corporation, No.1, Dharkas Road, Attivakkam, Redhills, Chennai -60</td><td>மதிப்பீட்டை விட அதிகம் (0.81%)</td></tr>
<tr><td>3) SB & Co-SWM Materials, Manpowers Suppliers & Contractor,<br>No-1 ESI Nagar, Thiruvachery, Agaram Main Road, Selaiyur, Chennai – 73.</td><td>மதிப்பீட்டை விட அதிகம் (4.36%)</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு வரிசை எண் 1–ல் Rajeswari L. Nathan Chemicals & Traders, Chennai-11 என்பவர் மற்ற ஒப்பந்தப்புள்ளிகளை விட குறைவாகவும் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார்.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | எனவே மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>2) மேற்காணும் பணிக்கு வரிசை எண் 1–ல் கண்டுள்ள Rajeswari L. Nathan Chemicals & Traders, Chennai-11 என்பவர் மற்ற ஒப்பந்தப்புள்ளிகளை விட குறைவாகவும் மதிப்பீட்டு விலை விகிதத்தில் (0.0%) ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 871/2020/இ1 | |

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>Serial Number and Subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>90.10.2020</td><td>185) நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2019–2020–ம் நிதியாண்டின் கீழ் பணி செய்ய திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.அ2/190/2020 நாள் 09.10.2020–ம் தேதிய செயல்முறை உத்திரவு கடிதத்தில் திருத்திய நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. இதில் பொன்னியம்மன் கோயில் தெருவில் பணி செய்ய பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் தற்போது இடம் மட்டும் மாற்றி அமைக்க நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. எனவே ஏற்கனவே பணி உத்திரவு வழங்கியுள்ள T.S. Solar Power System, Vellore ஒப்பந்ததாரர் மாற்று இடத்தில் பணியினை மேற்கொள்ள நகர மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எ</th><th>ஏற்கனவே வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி இடம்</th><th>மதிப்பீடு</th><th>தற்பொழுது வழங்கப்படவேண்டிய திருத்திய நிர்வாக அனுமதி இடம்</th></tr>
<tr><td>1</td><td>பொன்னியம்மன் கோவில் அருகில் 10 மீ உயரம் 5 செட் LED விளக்குகள் கொண்ட உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் பணி மதிப்பீடு</td><td>4.50 இலட்சம்</td><td>புதுப்பேட்டை ரோடு திரு.வி.க சாலையும் சந்திக்கும் இடத்தில் 10 மீ உயரம் 5 செட் LED விளக்குகள் கொண்ட உயர் கோபுர மின் விளக்கு அமைத்தல் பணி</td></tr>
</table>
அலுவலக குறிப்பு<br>
1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>
2) ஏற்கனவே பணி உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் , தற்பொழுது இடம் மட்டும் வேறுபடுவதால் ஏற்கனவே பணி உத்திரவு வழங்கியுள்ள T.S. Solar Power System, Vellore ஒப்பந்தாரர் மாற்று இடத்தில் பணியினை செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
ந.க.எண் 0066/2020/இ1</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

திருப்பத்தூர் நகராட்சி

அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>Serial Number and Subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>90.10.2020</td><td>186) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட பணிக்கு 25.09.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம்
<table>
<tr><td>1) Construction of additional School Class Room at Gowtham Pettai in Ward No 30 at TPT <u>Estimate Amount Rs.6.50 Lakhs</u></td><td rowspan="2">நகர மன்ற தீர்மானம் எண் 154/14.09.2020</td><td>1. திரு. கே.மூர்த்தி ஒப்பந்ததாரர் , (0.01% சதவீதம்) மதிப்பீட்டை விட குறைவு.<br><br>2. ஆர். வேணுகோபால் , ஒப்பந்ததாரர் (1.41% சதவீதம்) மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
<tr><td>2) Construction of Storm Water Drain with Culvert to Pudhupettai road 7th Street Gandhi Nagar ward no 26 at TPT <u>Estimate Amount Rs.5.00 Lakhs</u></td><td>1.TKM Constructions, Phudhupettai Road Main. Tirupattur. (0.29% சதவீதம்) மதிப்பீட்டை விட குறைவு.<br><br>2. திரு.கே.மூர்த்தி ஒப்பந்ததாரர் , (1.09% சதவீதம்) மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
வரிசை எண் 1–ல் கண்டுள்ள பணிக்கு திரு. கே.மூர்த்தி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.01% ) சதவீதம் வழங்கியுள்ளார். எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
வரிசை எண் 2–ல் கண்டுள்ள பணிக்கு TKM Constructions, Phudhupettai Road Main. Tirupattur. ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.29% சதவீதம்) வழங்கியுள்ளார். எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின்</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் 773/2020/இ1 | |

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 187) நகராட்சி பொது நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ் பணிகள் செய்ய 11.09.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| வ | வேலையின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | மன்ற தீர்மானம் எண் நாள் | ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் |
|---|---|---|---|---|
| 1 | ப.உ.ச நகரில் குப்பை கிடங்கில் Bio Mining பணிக்காக கிராவல் சாலை அமைத்தல் பணி | 2.00 | 144/12.08.2020 | 1.TKMConstructions, Pudhupettai Road Main. Tirupattur. ஒப்பந்ததாரர் ( 0.19 %) மதிப்பீட்டை விட குறைவு .<br><br>2. திரு. எம். புஷ்பநாதன், ஒப்பந்ததாரர் (0.98%) சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| 2 | ப.உ.ச நகர் குப்பை கிடங்கில் உள்ள மின்சார ஒயர்கள் ஆபத்தான நிலையில் உள்ளதால் அதனை | 5.00 | 146/12.08.2020 | 1. திரு. எம்.புஷ்பநாதன், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் ( 0.30 %) மதிப்பீட்டை விட குறைவு . |

| | | | | |
|---|---|---|---|---|
| | குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை 360 Excavator கொண்டு அகற்றும் பணி | | | 2. திரு. கே.சேகர், ஒப்பந்ததாரர் (2.10%சதவீதம்) மதிப்பீட்டை விட அதிகம். |
| 3 | நகராட்சி ஆணையாளர் குடியிருப்பு வளாகம் பராமரிப்பு பணிகள் | 9.75 | 145/12.08.2020 | 1. திரு. கே. சேகர், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் ( 0.18%) மதிப்பீட்டை விட குறைவு .<br><br>2.திரு.எஸ்.கார்த்திகேயன், ஒப்பந்ததாரர் (1.08% சதவீதம்) மதிப்பீட்டை விட அதிகம். |

வரிசை எண் 1–ல் கண்டுள்ள பணிக்கு திரு. TKMConstructions, Pudhupettai Road Main. Tirupattur. ,ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.19% சதவீதம்) வழங்கியுள்ளார். எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வரிசை எண் 2–ல் கண்டுள்ள பணிக்கு திரு. எம்.புஷ்பநாதன், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர். மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.30% சதவீதம்) வழங்கியுள்ளார். எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வரிசை எண் 3–ல் கண்டுள்ள பணிக்கு திரு. கே. சேகர், ஒப்பந்ததாரர், திருப்பத்தூர் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.18% சதவீதம்) வழங்கியுள்ளார். எனவே குறைவான

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |

## திருப்பத்தூர் நகராட்சி

## அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>Serial Number and Subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>90.10.2020</td><td>188) திருப்பத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் இருந்து வந்த TN 23BR 5997 வண்டியினை குடிநீர் உபயோகத்திற்காக பயன்படுத்த ஏதுவாக பழுது பார்ப்பு பணிகள் செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டது.
<table>
<tr><td>1</td><td>Tirupattur Agro Engineering & Service , Asiriyar Nagar, Tirupattur</td><td>Rs.6,98,100/-</td></tr>
<tr><td>2</td><td>Jaya Kumar Engineering Works, CKC Road, Tirupattur.</td><td>Rs.7,02,100/–</td></tr>
<tr><td>3</td><td>K.K.N. Contract Works, Duvaragai Pillaiyar Koil Street, Tirupattur.</td><td>Rs. 6,99,900/–</td></tr>
</table>
<br>மேற்படி பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அடிப்படையில் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7,90,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<br><br>அலுவலக குறிப்பு
<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.
<br>2. பணிக்கான செலவீனத்தை நகராட்சி குடிநீர் நிதி 2020–2021–ம் நிதியாண்டின் கீழ்
<br>மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
<br><br>ந.க.எண்.904/2020/இ1</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 189) இந்நகராட்சியில் ஒப்பந்த ஓட்டுநர்களாக இரண்டு நபர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்கள் 2019–2020–ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் பணி புரிந்து வருகிறார்கள். அவர்களின் பணிக்காலம் 31.07.2020–வுடன் முடிவடைந்து விட்டது. தற்பொழுது பணியின் அவசியம் கருதி பணியாளர்களின் பணி நீடிப்பு காலத்தை 1.08.2020 முதல் 31.12.2020 வரை 6 மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்யவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 2019–2020–ஆம் ஆண்டில் நிர்ணயம் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் தொகையினை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்கள் நிர்ணயம் செய்த தொகையினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 2185/2005/இ1<br><br>190) திருப்பத்தூர் நகராட்சி 2011–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி 83612 மக்கள் தொகை கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும். தற்போது தமிழ அரசால் திருப்பத்தூர் நகரம் மாவட்டமாக தோற்றுவிக்கப்பட்டது. இதில் 36 வார்டுகள் உள்ளடக்கியதாகும். இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 3269 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் தனியார் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தனியார் ஒப்பந்த காலம் 30.09.2020–வுடன் முடிவடைந்து விட்டது. மேலும் இந்த நிதியாண்டிற்கான ( 2019–2020) பரமாரிப்பு பணிகளை தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு தீர்மானம் எண் 176 நாள் 14.09.2020–ல் அனுமதி பெற்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு உரிய அனுமதி பெறப்படும் வரை | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை தற்பொழுது பார்க்கும் சன்ஜெய் டிரேடர்ஸ், தருமபுரி என்பவருக்கு 1.10.2020 முதல் 31.12.2020 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்து தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 1416/2016/2016/இ1 | |

திருப்பத்தூர் நகராட்சி

அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 191) நகராட்சி அலுவலக கட்டிடத்தின் உள்பகுதி மற்றும் வெளிப்புற பகுதிகளில் கேமரா பொருத்துதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.25 இலட்சம் ஆகும். இப்பணியினை செய்திடவும் பணிக்கான தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1114/2020/இ1 | அனுமதிக்கப்பட்டது |

திருப்பத்தூர் நகராட்சி

அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 192) திருப்பத்தூர் நகராட்சிக்கு அறிஞர் அண்ணா வணிக வளாக கட்டிடத்தின் மேற்கூரை பழுது பார்த்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.50 இலட்சம் ஆகும். இப்பணியினை செய்திடவும் பணிக்கான தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1115/2020/இ1 | அனுமதிக்கப்பட்டது |

## திருப்பத்தூர் நகராட்சி

## அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 193) திருப்பத்தூர் நகராட்சிக்கு சொந்தமான நகர்புற சுகாதார மையம் கட்டிடத்தின் மேற்கூரை பழுது பார்த்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.50 இலட்சம் ஆகும். இப்பணியினை செய்திடவும் பணிக்கான தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1116/2020/இ1 | அனுமதிக்கப்பட்டது |

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 194) திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண் 15 பாலம்மாள் காலனி மற்றும் வார்டு எண்.32 வெங்கடேஷ்வரா நகர், தில்லை வட்டம் ஆகிய பகுதிகளில் புதியதாக கேட்வால்வு பொருத்துதுல் மற்றும் தொட்டிகள் கட்டுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சமாகும். பணியினை செய்திடவும் அதற்குண்டான தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1118 /2020/இ1 | அனுமதிக்கப்பட்டது |

## திருப்பத்தூர் நகராட்சி

## அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 195) திருப்பத்தூர் நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெரிய கால்வாய் (வெள்ளை வாய்கால்) பகுதியினை தூர் வாரிடவும், மார்க்கெட் தெரு, சின்னகடை தெரு, மற்றும் பெரிய கடை தெரு பகுதியில் கழிவு நீர் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சமாகும். பணியினை செய்திடவும் அதற்குண்டான தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 1117/2020/இ1 | அனுமதிக்கப்பட்டது |

__திருப்பத்தூர் நகராட்சி__

__அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்__

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 196) திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையதில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் மேற்கூரை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சம் ஆகும். இப்பணியினை செய்திடவும் பணிக்கான தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1119 /2020/இ1 | அனுமதிக்கப்பட்டது |

__திருப்பத்தூர் நகராட்சி__

__அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்__

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 197) நகராட்சியில் அனைத்து பிரிவு கணிணிகளிலும் Rail Internet Connection அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.50 இலட்சமாகும். இப்பணியினை திரு.பி.டி.சுந்தரம், ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி திரு.பி.டி.சுந்தரம், ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்1120 /2020/இ1 | அனுமதிக்கப்பட்டது |

திருப்பத்தூர் நகராட்சி

அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 198) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிகளை நிரந்தர மற்றும் தனியார் தூய்மை பணியாளர்களை கொண்டும், டெங்கு நோய் தடுப்பு பணிகளை DBC பணியாளர்களை கொண்டும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைகாலங்களில் பொதுமக்களுக்கு டெங்கு நோய் பரவாத வண்ணம் தடுக்கும் பொருட்டு பொது சுகாதார பணிகளின் அவசியம் கருதி டீ ஓடிசன் மருந்து வாங்கி பயன்படுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>பொது சுகாதார பணிகளின் அவசியத்தை கருதி, டீ ஓடிசன் கொள்முதல் செய்து பயன்படுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.606/2020/எச்1) | அனுமதிக்கப்பட்டது |

திருப்பத்தூர் நகராட்சி

அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | **199) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் LCV வாகனங்கள் மூலம் கழிவுகள் சேகரித்தல், தரம் பிரித்து பெறுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்.TN83 R 6427 LCV வாகனம் பழுதடைந்து நிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை உரிய அங்கீகாரம் பெற்ற (TATA Services Centre) அக்ஷயா மோட்டார்ஸ், நிறுவனம் மூலம் பழுது நீக்கும் பணிகள் மேற்கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br><br>அலுவலக குறிப்பு:-<br><br>பொது சுகாதார பணிகளின் அவசியத்தினை கருதி மேற்படி வாகனத்தை பழுது பார்க்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண்.0934/2020/எச்1)** | அனுமதிக்கப்பட்டது |

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 200) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் கழிவுகளை தரம் பிரித்து பெறுதல் பணிகளுக்காக LCV வாகனங்கள் 6 எண்ணிக்கையிலும், BOV வாகனங்கள் 36 எண்ணிக்கையிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் கடைகள், வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட வணிகம் சார்ந்த பகுதிகளில் கழிவுகளை தரம் பிரித்து பெறுவதற்கு தனியாக ஒரு வாகனம் தேவைபடுவதால், இந்நகராட்சியில் பயன்பாட்டில் இல்லாமல் நிறுத்தப்பட்டிருக்கும் வாகன எண்.TN23 BL 0339 மினி லாரியினை உரிய பழுதுகளை நீக்கி FC பணிகளை செய்து, வணிக பகுதிகளில் தரம் பிரித்து பெறப்படும் கழிவுகளை பெறுவதற்கு பயன்படுத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.90,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>பொது சுகாதார பணிகளின் அவசியத்தினை கருதி மேற்படி வாகனத்தை பழுது பார்க்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.0933/2020/எச்1) | அனுமதிக்கப்பட்டது |

திருப்பத்தூர் நகராட்சி

அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | (201திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் LCV வாகனங்கள் மூலம் கழிவுகள் சேகரித்தல், தரம் பிரித்து பெறுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்.TN83 M 0043 LCV வாகனம் ஓராண்டிற்கு மேல் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி வாகனத்தை உரிய அங்கீகாரம் பெற்ற TATA Services நிறுவனம் மூலம் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.29,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:-<br><br>பொது சுகாதார பணிகளின் அவசியத்தினை கருதி மேற்படி வாகனத்தை பழுது பார்க்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.0909/2020/எச்1) | அனுமதிக்கப்பட்டது |

<u>திருப்பத்தூர் நகராட்சி</u>

<u>அக்டோபர் 2020–ஆம் மாத மன்ற கூட்ட பொருட்கள்</u>

| Date of Meeting of the Council | Serial Number and Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 90.10.2020 | 202) திருப்பத்தூர் நகராட்சி பகுதிகளில் LCV வாகனங்கள் மூலம் கழிவுகள் சேகரித்தல், தரம் பிரித்து பெறுதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண்.TN83 M 0046 LCV வாகனம் ஓராண்டிற்கு மேல் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி வாகனத்தை உரிய அங்கீகாரம் பெற்ற TATA Services நிறுவனம் மூலம் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.32,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>பொது சுகாதார பணிகளின் அவசியத்தினை கருதி மேற்படி வாகனத்தை பழுது பார்க்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.0919/2020/எச்1) | அனுமதிக்கப்பட்டது |